மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 2
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

**டிசம்பர் 2009**

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹൺഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 டிசம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**கர்த்தராலே . . .**
**சொல்லப்பட்டவைகள்**
**நிறைவேறும்.**
லூாக்கா 1 : 45

**TVGM ஏலீம் சிறுவர் இல்லம் – பிரதிஷ்டை நாள் : 21.10.2009**



ஜெபித்த, கொடுத்த,
உழைத்த ஒவ்வொருவரையும்
கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**Thanks:**
**Pastor Viki Vicknaraja**
**2008 & 2009 Mission Team**
Pr. Peter , Pr.Trish,Pr.Andrew
**Pr. Tim & Bro.Warren**
**Pastor Luke Brough**
**Elim Christian Centre**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**Managing Director - Letter Dated: 10.11.2009**



**HAPPY CHRISTMAS**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு!

என் அன்பின் **கிறிஸ்மஸ்** வாழ்த்துக்கள்.

**கர்த்தராலே . . . சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்.** லூக். 1:45 ஆமென்!

2009 அக்டோபரில் TVGM **ஏலீம் சிறுவர் இல்லம்** மற்றும் 8 ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

**ஜெபித்த ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.**

**TVGM Social Service Trust** ன் கீழ் Leadership Training Centre Project ஐ **The Ambassdor School of Learning** (TASOL) தலைப்பில் கொண்டு வந்து, பின்வரும் நாட்களில் இதை தனி ஸ்தாபனமாக பதிவு செய்யலாமா எனவும் ஆலோசித்து ஜெபித்து வருகிறோம். இன்னும் தெளிவான முடிவுக்கு வரவில்லை. ஆதலால் நிலமும் வாங்க முடியவில்லை. **இந்த விஷயத்தில் உங்கள் ஊக்கமான ஜெபம் தேவைப்படுகிறது.**

கர்த்தருக்குச் சித்தமானால் 2010ல் Leadership Training Centre நிலம் வாங்கப்படவும், அதற்குரிய நோக்கங்கள், சட்டதிட்டங்கள் யாவும் தயார் செய்யப்பட்டு அரசாங்கத்தில் பதிவு செய்யப்படவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

கர்த்தருடைய கிருபையினால் நான் மட்டும் நவம்பர் 1 முதல் 5 வரை **இலங்கை வவுனியா** சென்று மக்களுக்கு சிறுஉதவிகள் செய்யவும், தொடர்ந்து யூ.கே.செல்லவும் கர்த்தர் கிருபை செய்தார்.

கர்த்தருக்குச் சித்தமானால் ஒரிஸாவிலுள்ள **கந்தமால்** மாவட்டத்தில் **3 ஜெபவீடுகள்** மற்றும் சிறுஉதவிகள் செய்ய ஜெபித்து வருகிறோம்.

2010ல் ஜெபவீடு கட்ட வேண்டிய இடங்களை கர்த்தர் காட்டும்படியாக தரிசனம் பெற்றவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும், **100–கிராம ஊழியம்** புதுக்கோட்டை மாவட்டத்தில் மீண்டும் நடைபெற ஜெபியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்

கிறிஸ்மஸ்
சிறப்பு
செய்தி

# கர்த்தராலே . . . சொல்லப்பட்டவைகள் நிறைவேறும். லூக்கா 1:45

கிறிஸ்மஸ் பண்டிகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என் அன்பு தேவ ஊழியரே! தேவபிள்ளையே! **"கர்த்தராலே உங்களுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்"** – என வாழ்த்துகிறேன்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு என்று சொன்னாலே **"நிறைவேறுதலின் காலம்"** என்று பொருள் கொள்ளலாம். ஏனெனில் தீர்க்கதரிசிகள் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை குறித்து சொன்ன காரியங்கள் அனைத்தும் நிறைவேறினது.

**முதலாவது: மத்தேயு 1:21** "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்".

**மத்தேயு 1:23**அவன்: இதோ, ஒரு கன்னிகை . . இம்மானுவேல் என்று பேரிவார்கள் என்று சொன்னான்.

**மத்தேயு 1:22** "தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது".

**பக்தன் பாடுகிறார்:**

**முன்பு அவர் சொன்னபடி**
**முடிப்பதற்காக**
**இங்கு மோட்சம் விட்டு தாழ்ச்சியுள்ள**
**முன்னணையிலே**
**பெத்தலையில் பிறந்தவரைப் . . .**

**இரண்டாவதாக: மத்தேயு 2:15**

ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

**மூன்றாவதாக: மத்தேயு 2:17**

புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்.

**மத்தேயு 2:18** "எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று".

**நான்காவது: மத்தேயு 2:23** நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

என் அன்பு தேவபிள்ளையே! உங்களுக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்படியாக இவைகளெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.

சிலவைகள் நல்லவைகளாக இருக்கின்றன. சிலவைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாக இருக்கின்றன. இரண்டுமே தேவனால் சொல்லப்பட்டவைகள் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து தீர்க்கதரிசிகளால் கூறப்பட்ட 4 காரியங்களை சற்று கவனித்துப் பாருங்கள்.

**முதலாவது** மத்தேயு 1 ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை குறித்த நற்செய்தியை பார்க்கிறோம். இந்த நற்செய்தியின் மூலமாக யோசேப்புக்கு ஒரு சந்தேகம் வந்தாலும், யோசேப்பினிடத்தில் ஒரு நற்குணம் காணப்படுகிறது.

**மத்தேயு 1:19** அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.

யோசேப்பு ஒரு நீதிமான். கன்னிமரியாள் தவறு செய்திருப்பாளோ என்று ஒரு சந்தேகம், நியாயமான சந்தேகம், ஆனால் இதற்குள்ளும் ஒரு நற்குணத்தைப் பாருங்கள்.

**“அவளை அவமானப்படுத்த மனதில்லாமல்”** இரகசியமாய் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.

இயேசுவின் பிறப்பை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் அன்பு தேவ ஊழியரே, தேவ பிள்ளைகளே, இந்த ஆண்டில் யோசேப்பின் நற்குணம் உங்கள் தீர்மானமாக மாறட்டும்.

**“அவளை அவமானப்படுத்த மனதில்லாமல்”** என்ற வார்த்தை உங்கள் உள்ளத்திலே ஊடுருவி பாயட்டும்.

கர்த்தராலே சொல்லப்பட்டவைகள் நிறைவேற, உங்களுக்கு தேவையானது நற்குணம். **“மற்றவர்களை அவமானப்படுத்தாதேயுங்கள்**. அற்பமாக எண்ணாதிருங்கள். தூற்றிக் கொண்டு திரியாதிருங்கள். உங்கள் வாழ்க்கையில், கர்த்தர் சொன்னவைகள் நிறைவேறாமல் போக காரணம் உங்களை நீதிமானாக எண்ணி மற்றவர்களை அற்பமாக எண்ணுதல், மேலும் மற்றவர்களை அவமானப்படுத்துதல் ஆகும்.

யோசேப்பு வாழ்க்கையில் ஏற்பட்ட சந்தேகம் சாதாரணமானதல்ல. அது அவருடைய வாழ்க்கை பிரச்சனை. யோசேப்பு நீதிமானாக இருந்ததால் மரியாளை அவமானப்படுத்த மனதில்லை.

தயவு செய்து ஒரு விசை சிந்தித்து பாருங்கள். அடுத்த வீட்டு பிள்ளை ஒரு தவறு செய்து விட்டால், எத்தனை முறை அவர்களை அவமானப்படுத்தி, மற்றவர்களிடம் தூற்றிக் கொண்டிருக்கிறீர்கள். மேற்பூச்சாக “அவர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்” என்ற வார்த்தையையும் மாய்மாலமாக சேர்த்துக் கொள்ளுகிறீர்கள்.

ஆனால் யோசேப்பை கவனித்துப் பாருங்கள். இரகசியமாய் அவளை தள்ளிவிட யோசனையாயிருந்தான். பாவச் செயல்களை ஒருவரிடம் காணும்போது, அதைக்குறித்து மற்றவர்களிடம் பேசாதிருங்கள். ஏளனமாக சிரிக்காதேயுங்கள்.

**கலா.6:7**மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

**இரண்டாவதாக:**கிறிஸ்துவின் பிறப்பின்போது, ஏரோதின் மரண பரியந்தம் அங்கே இருந்தான். எகிப்தில் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. **சொன்னவைகள் நிறைவேற தேவசமுகத்தில் காத்திருக்க வேண்டும்.**

**மூன்றாவதாக:**இயேசுகிறிஸ்துவைக் குறித்து சொல்லப்பட்டவைகள் நிறைவேற, ஒருபுறம் புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கம் கொண்டாடுதலாகிய கூக்குரலும் கேட்கப்படுகிறது.

ஒரு பக்கத்தில் நற்செய்தி. மறுபக்கத்தில் அழுகை கூக்குரல்.

கர்த்தரால் சொல்லப்பட்டவைகள் நிறைவேறுவதற்கு முன்னால் ஒரு பக்கம் அழுகையில் கூக்குரல். விளங்கி கொள்ள முடியாதவைகள் இது. தேவனுடைய ஞானம் நம்மால் விளங்கி கொள்ள முடிய வில்லை.

**நான்காவதாக:** இயேசுகிறிஸ் துவுக்கு **'நசரேயன்'** என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது.

கர்த்தரால் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்போது **'நீ புதிய நாமத்தால் அழைக்கப்படுவாய்'**. இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.

2009ம் ஆண்டை முடிக்கப் போகும் அன்பு தேவஊழியரே, தேவபிள்ளையே! புத்தாண்டு ஆராதனையில் நீங்கள் கர்த்தருடைய சமுகத்தில் பெற்றுக் கொண்ட வாக்குத்தத்தத்தை ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள்.

வேதம் சொல்கிறது: ***கர்த்தராலே . . . சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்.***

2010ம் ஆண்டு வாக்குத்தத்த வசனத்திற்காக கிறிஸ்மஸ் காலங்களிலேயே காத்திருங்கள்.

2009ம் ஆண்டில் உங்கள் குடும்பத்தில், சபையில், வேலை ஸ்தலத்தில் தேவன் செய்த நன்மைகளை சொல்லி சொல்லி துதிக்க மறவாதீர்கள்.

இப்பொழுது செய்கிற துதியும் ஸ்தோத்திரமும் 2010ம் ஆண்டில் புதிய வாக்குத்தத்தத்தால் உங்களை நிரப்பும். அதுமாத்திரமல்ல, வாக்குத்தத்தங்களை பெற்று அனுபவிப்பீர்கள். ஆமென்.

இந்த செய்தியானது 2009ம் வருட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலும், 2010ம் ஆண்டின் வாக்குத்தத்தத்தை பெற ஆயத்த செய்தியாகவும் இருக்கட்டும்.

**பக்தன் பாடுகிறார்:**

***அற்பமான ஆரம்பத்தை***
***அசட்டை பண்ணாதே***
***தொடங்கினவர் முடித்திடுவார்***
***சொன்னதை செய்திடுவார்.***
***வாதை உந்தன் கூடாரத்தை***
***அணுகாது மகனே (ளே)***

இந்த கிறிஸ்மஸ் காலங்களிலாவது **பிள்ளைகளின் திருமணம் நடைபெறாதா?** என ஏங்கிக் கொண்டிருக்கும் பெற்றோர்களே! **கடன் நீங்காதா?** என கலங்கிக் கொண்டிருக்கும் கர்த்தருடைய பிள்ளையே! **தொழிலில் முன்னேற்றம் ஏற்படாதா?** என எதிர்பார்த்திருக்கும் சகோதரரே! **சபையில் வளர்ச்சி ஏற்படாதா?** என ஆத்துமபாரத்தோடு காத்திருக்கும் தேவஊழியரே!

***கர்த்தராலே . . .***
***சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்.***

விசுவாசத்தோடே பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்..

**கர்த்தராலே எனக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்.**
**கர்த்தராலே என் குடும்பத்திற்கு சொல்லப் பட்டவைகள் நிறைவேறும்.**
**கர்த்தராலே என் சபைக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்.**
**கர்த்தராலே என் கம்பெனிக்கு சொல்லப் பட்டவைகள் நிறைவேறும்.**

விசுவாசித்தவளே பாக்கியவதி. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்.

**தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## பெரம்பலூர் - வேப்பூர் யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**<u>நோக்கம்</u>: 2009 டிசம்பர் 14** திங்கள் காலை 9 மணி முதல் **டிசம்பர் 18** வெள்ளி இரவு 10 மணி முடிய **பெரம்பலூர் – வேப்பூர் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 டிசம்பர் 14** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 டிசம்பர் 18** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 டிசம்பர் 14 - 18 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**<u>உபவாச ஜெபம் நடைபெறும் இடம்</u>**

**ஜீவ ஊற்று திருச்சபை**
**போஸ்ட் ஆபிஸ் தெரு,**
**வேப்பூர் - 621 717,**
**குன்னம் தாலுகா, பெரம்பலூர் மாவட்டம்.**
**செல்: 93626 42456**

**<u>நன்றி</u>** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர்.S.பர்னபாஸ், பாஸ்டர் ராஜா** ஆகியோருக்கு நன்றி!

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**<u>பிரயாணப்படி</u> :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**<u>முக்கிய அறிவிப்பு</u> :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**<u>சகல தொடர்புகளுக்கும்</u> :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# திண்டுக்கல் - வடமதுரை யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 19.10.2009 முதல் 23.10.2009 முடிய**

**Thanks: Light House Ministries - NECK-ELC**



கர்த்தருடைய கிருபையால் திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை யூனியனில் 19.10.2009 திங்கள் முதல் 23.10.2009 வெள்ளி வரை **"100 கிராம ஊழியம்"** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகள் இவைகளை வடமதுரை **நல்ல சமாரியன் சபை பாஸ்டர். மகேந்திரன்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள். தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 49 கிராம ஊழியர்கள் வந்து ஊழியம் செய்தார்கள்.

முதல்நாள் ஜெபத்தில் வடமதுரை யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

இந்த ஜெபத்தில் நியூசிலாந்து ஏலீம் மிஷனெரி குழுவினர் பாஸ்டர். விக்கி தலைமையில் வந்து கலந்து கொண்டு கிராம ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக ஜெபித்தார்கள். **பாஸ்டர். விக்கி, பாஸ்டர். ஆண்ட்ரூ** தேவ செய்தி கொடுத்தார்கள்.





பின்பு கிராம ஊழியர்களை 11 குழுவாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே கூடி ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்கு கடந்து சென்றனர். இவர்கள் **5** நாட்கள் கிராமங்களில் தங்கி வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம் இலவசமாக வழங்கி **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் **12,490 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 20,000 இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள், 10,000 சிலுவைக் கொடிகள்** வழங்கப்பட்டன. ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்டவர்கள் 175 பேர் தங்கள் விலாசங்களை கொடுத்து வேதபாடங்கள் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

கிராம ஊழியர்கள் 5 நாட்கள் ஊழியங்களை முடித்து வந்து, சாட்சி கூறினார்கள். பாஸ்டர் ஜோசப் ஜெபமணி அவர்கள் ஊழியர்கள் சாட்சியை கேட்டு ஜெபித்தார்கள்.

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 சகோ. பிரேம் ஆனந்த், சூசை மாணிக்கம், ஜெபமலை நாதன், பீட்டர் ராமலிங்கம், செல்வராஜ்**

தென்னம்பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுவீடாக யோவான் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக்கொடி கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். ஒருவரிடம் சுவிசேஷம் சொன்னபோது அவர் உங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டால் எங்கள் தெய்வங்களை விட்டு விட வேண்டுமே உறவினர்கள் மற்றவர்களோடு சில பரம்பரை காரியங்களில் பங்கு பெற முடியாதே என்று கேட்டார். இவருக்கு **இயேசு ஒருவரே மெய்யான கடவுள்** என்பதை எடுத்துச் சொன்னோம். அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1600 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:2 சகோதரி எஸ்தர், அன்னக்கிளி, பிச்சையம்மாள், மனோரஞ்சிதம்.**

நாங்கள் 7 கிராமங்களுக்கு சென்று அங்குள்ள எல்லா வீட்டிற்கும் யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் அன்பாக வாங்கிக் கொண்டார்கள். சுவிசேஷத்தை ஆர்வமாக கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 சகோ. வசந்தா ஸ்டீபன், ஜெபமணி, கிளமெண்ட்ஸ் மேரி, அபியேல் அந்தோணியம்மாள்**

சித்துவார்பட்டி கிராமத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது யாவரும் வாஞ்சையோடு வாங்கிக் கொண்டார்கள். ஊழியம் செய்து விட்டு ஒவ்வொரு நாளும் இரவில் ஒரு வீட்டில் தங்கியிருந்தோம். அங்கு ஜெபம் செய்வோம்.வீட்டின் தலைவர் ஆட்டோவில் போகும் போது அது தலை கீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் சென்ற மற்ற 4 பேருக்கு அடிபட்டு காயம் ஏற்பட்டது. ஆனால் எங்களுக்கு இடம் கொடுத்த அவருக்கு ஒரு சேதமும் ஏற்படவில்லை. கர்த்தர் காத்தார் என்று சொன்னார்கள். மொத்தம் 1015 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:4 சகோதரி. டோராலாசர், கிரேஸ் பத்மா, சீலா அம்மாள், அமிர்தம், ஜோதிமணி**

கொம்பேரிபட்டி கிராத்தில் சுவிசேஷத்திற்கு அவ்வளவாக வரவேற்பு காணப்படவில்லை. இப்புத்தகம் ரூ 25/– விலை ஆனால் உங்களுக்கு இலவசமாக தருகிறோம் என்றதும் யாவரும் வாங்கிக் கொண்டார்கள். ஒரு சிலர் இரண்டு கைகளையும் பயபக்தியுடன் நீட்டி வாங்கினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷ புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:5 சகோ. மாற்கு மாரியப்பன், மகாராஜன், ஆண்டியப்பன், சாமுவேல்**

கொல்லப்பட்டி, கொப்பம்பட்டி, ரெட்டியபட்டி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து ஒவ்வொரு வீட்டிற்கும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். இங்கு ஒருவர் எங்களிடம் உங்களைப் போல ஒரு மனிதன் வந்து ஏதோ ஒரு அட்டையை கொடுத்துவிட்டு என்னிடத்தில் ரூபாய் 1500ம், ஒரு மூக்குத்தியும் வாங்கிச் சென்று விட்டான். நீங்க என்னத்தை வாங்கிட்டு போக வந்தீர்கள் என்று கோபமாக கேட்டான். அதற்கு நாங்கள் உங்களிடம் ஒன்றும் வாங்கி விட்டு போக வரவில்லை. உங்களுக்காக, எல்லாருக்காக சிலுவையில் மரித்து உயிர்த்து இன்றும் உயிருடன் இருக்கும் இயேசுவின் வார்த்தைகளையும், ஆசீர்வாதங்களையும் கொடுத்துவிட்டுப்

போகவே வந்தோம் என்று சொன்னோம். மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:6 பாஸ்டர். ஆல்வின், சகோ. தாவீது, ஜோசப் , மாசிலாமணி**

வேலாயுதம்பாளையம், குரும்பபட்டி, சித்துார் கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். வீடுகள் தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் அன்பாக வாங்கினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:7 சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், லீதியாள், சலோமி, தேவகிருபை.**

வேல்வார்கோட்டை ஊராட்சியிலுள்ள 14 கிராமங்களில் ஒரு கிறிஸ்தவர் கூட இல்லை. விக்கிரகங்கள் நிறைந்த கிராமங்களாக இருந்தது. மக்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்ற ஜெபத்தோடு சுவிசேஷம் அறிவித்து, வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் வாஞ்சையுடன் வாங்கினார்கள். மொத்தம்1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:8 சகோ.யோசுவா, இஸ்ரவேல், ஸ்டீபன்ராஜ், அந்தோணி, எபிநேசர்.**

சிங்காரக்கோட்டை, காணப்பாடி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் கிறிஸ்தவர்களோ, சபையோ எதுவும் இல்லை. இங்குள்ள மக்களுக்கு வீடுவீடாக சென்று யோவான் புத்தகம் கொடுத்து **இயேசுவே மெய்யான கடவுள்** என்று சொன்னோம். யாவரும் வாஞ்சையோடு ஏற்றுக்கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோதரி கஸ்தூரி, மரியாள், அன்னாள், கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் படிக்காத பாமரமக்களாக இருந்தார்கள். இவர்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்லி புத்தகம் கொடுத்தோம். ஒரு சிலர் வாங்க மறுத்தனர். சில பெரியவர்கள் தங்களின் வியாதி நீங்க ஜெபிக்கும்படி கேட்டார்கள். ஜெபித்து கடந்து வந்தோம். மொத்தம் 1400 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோதரி ராணிசந்திரா, சோனியா,தெபோராள்,தேவபாக்கியம்.**

நாங்கள் 8 கிராங்களில் ஊழியம் செய்தோம். அங்குள்ள மக்கள் விவசாயி களாகவும், படிப்பறிவு இல்லாதவர்களாவும் இருந்தார்கள். இயேசு யார் என்றே தெரிய வில்லை. வாலிபர், பெரியவர், முதியோர் யாவருக்கும் இயேசுவைப் பற்றி சொல்லி அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 சகோதரி சாந்தி, லூயிஸ், செலின், ரெபேக்கா லட்சுமி.**

நாங்கள் சென்ற ஏ.வி.பட்டி என்ற கிராமத்தில் ஒரு பெண் எங்களைப் பார்த்து என் கை ரேகையைப் பார்த்து ஜோசியம் சொல்வீர்களா ? என்று கேட்டார். நாங்கள் அவர் கையைப் பிடித்து இயேசு உங்களை நேசிக்கிறார் என்று சொன்னோம். உடனே அவர் எனக்கு யாருமே இல்லை. இயேசு என்னை நேசிப்பாரா என்று கேட்டார். நிச்சயம் இயேசு உங்களை நேசிக்கிறார் என்று சொல்லி சபைக்கு செல்ல ஆலோசனைக் கூறினோம். மொத்தம் 1275 சுவிசேஷப் புத்தகங்கள், 960 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**நன்றி:** இம்முகாமின் சகல பணிகளையும் பொறுப்புடன் கவனித்து செயல்பட்ட **சகோ.பன்னீர்** அவர்களுக்கு நன்றி!



## கிறிஸ்மஸ் நாட்களில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள், ஊழியர்கள்,தொழுநோயாளர்கள், விதவைகளை நினைவுகூருங்கள்!

| ஒரு நபர் விபரம் | | | மொத்த நபர்கள் |
|---|---|---|---|
| ஒரு சிறுவனுக்கு கிறிஸ்மஸ் துணி | ரூ. | 300 | 75 |
| ஊழியர் ஒருவருக்கு அன்பளிப்பு | ரூ. | 1,000 | 40 |
| ஊழியர் குடும்பம் ஒன்றிற்கு | ரூ. | 2,000 | 3 |
| 100 கிராம ஊழியர் ஒருவருக்கு | ரூ. | 500 | 60 |
| விதவைகள், முதியோர் ஒருவருக்கு | ரூ. | 250 | 40 |
| தொழுநோயாளர் ஒரு குடும்பத்திற்கு | ரூ. | 1,000 | 20 |
| கிறிஸ்மஸ் நிகழ்ச்சி பரிசு, விருந்து | ரூ. | 20,000 | |

**மொத்தம் ( உத்தேசமாக)** Rs.1,48,500

**இம்மாபெரும் தேவையில் உங்கள் பங்கு என்ன?**

**ஜெபியுங்கள் ! தாங்க முன்வாருங்கள்!**

## 2009 டிசம்பர் மாத இயேசுவை விரும்புவோம் முகாம்

**மாவட்டம் :** கன்னியாகுமரி
**யூனியன் :** திருவட்டார்
**நாள் :** 19.12.2009 சனி
**நேரம் :** காலை 9 மணி

**கூடுமிடம்**

**Rev.S.ஏசுதாஸ்**
**இந்தியா பிலதெல்பியா சர்ச்**
**உடையார்விளை**
**மேக்காமண்டபம் போஸ்ட்**
**அழகிய மண்டபம் வழி**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
போன் : **04651 - 257181**
**04652 - 277251**

## அக்டோபர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்



கர்த்தருடைய கிருபையால் 10.10.2009 அன்று நாமக்கல் – ராசிபுரம் யூனியனிலுள்ள இம்மானுவேல் ஏ.ஜி.சபையில் இயேசுவை விரும்புவோர் முகாம் நடைபெற்றது. அழைப்பு கடிதம் பெற்றுக்கொண்டவர்களில் 4 பேர் ஆவர்முடன் வந்து கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு இயேசுவைப் பற்றி கூறியபோது, ஏற்றுக்கொண்டு தங்களுக்காக ஜெபிக்கும்படி கூறினார்கள். தனித்தனியாக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. ஏ.ஜி.சபையின் சார்பில் மதிய ஆகாரம் வழங்கப்பட்டது. **தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### பத்திரிக்கை ஊழியங்கள்

*கர்த்தருடைய கிருபையினால் ஒவ்வொரு மாதமும் விசுவாசிகளுக்காக "100-கிராம ஊழியம்" என்ற பத்திரிக்கையும், புற மத நண்பர்களுக்காக "தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்" என்ற பத்திரிக்கையும் வெளியிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் எழுதிய சாட்சிகளில் சிலவற்றை இங்கே பிரசுரிக்கிறோம். வாசித்து தேவாதி தேவனை மகிமைப்படுத்துங்கள்.*

1. **சகோ. சுபாஷ் சந்திரபோஸ், நாமக்கல்.**

**"100–கிராம ஊழியம்"** மாதாந்திர பத்திரிக்கையில் வெளிவந்த, **"இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன்"** என்ற வேத வசனம் என்னிடத்தில் யாரோ ஒருவர் பேசியது போல் இருந்தது. சமாதானம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

2. **சகோதரி சந்தன மேரி, காஞ்சிபுரம்.**

2009 செப்டம்பர் மாத பத்திரிக்கையில் வெளிவந்த **"இருளடைந்த நீர் விடியற்காலத்தைப் போலிருப்பீர்"** என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தம் துக்கம் தாங்க முடியாமல் இருந்த என் இருதயத்துக்கு மிகவும் ஆறுதலாயிருந்தது.

3. **சகோதரி ராஜாமணி, காஞ்சிபுரம்.**

**"100– கிராம ஊழியம்"** பத்திரிக்கை ஒவ்வொரு மாதமும் எனக்காகவே எழுதியதுபோலவும், என் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதாகவும், சாட்சி பகுதி என்னோடு பேசுவதாகவும் உள்ளது.

4. **சகோ.மலையப்பன், நெல்லை.**

2009ம் ஆண்டு வாக்குத்தத்தம் **"இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்"** என்ற வசனத்தின்படி எங்கள் குடும்பத்தில் கர்த்தர் முதலில் வீட்டைக் கட்டி முடித்தார். மகளுக்கு திருமணம் நடைபெற்றது. மகளுக்கும், மகனுக்கும் கர்த்தர் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார்.

5. **சகோதரி சுகன்யா, கோவை.**

**"தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்"** பத்திரிக்கையில் **"இருளடைந்த நீர் விடியற்காலத்தைப் போலிருப்பீர்"** என்ற வாக்குத்தத்தத்தையும், விடுதலை என்ற தலைப்பில் வெளி வந்த செய்தியையும் படித்தேன். அது என் மனதிற்கு சமாதானத்தை தந்து, இன்னும் இயேசுவை அறிந்துகொள்ள வேண்டும் என்ற வாஞ்சையை உருவாக்கியது.

6. **சகோதரி மீனா, தஞ்சாவூர்.**

2009 ஆகஸ்டு மாதத்தில் வெளிவந்த வாக்குத்தத்தம் **"கர்த்தர் நிச்சயமாகவே தப்புவிப்பார்"** என்ற வசனம் மனதிற்கு மகிழ்ச்சியை தந்தது.

### ஜெபியுங்கள்! உதவுங்கள்!

➤ **100–கிராம ஊழியம், தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்** பத்திரிக்கை ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். உள்நாடு, வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

➤ ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கை வருமானாலும், உங்கள் முகவரி மாறினாலும் உடனே எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

➤ பத்திரிக்கையின் மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களையும் எங்களுக்கு தெரியப்படுத்த மறவாதேயுங்கள்.

# கடித ஊழியங்கள் மூலம் கர்த்தர் செய்த அற்புதங்கள்!

## விசுவாசிகள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள்:-

1. **சகோ. தேவசுந்தரம், திருச்சி.**

என் மகளுக்கு 9 ஆண்டுகள் குழந்தையில்லாமல் இருந்தது. பலர் நிந்தித்தனர். வேதனையோடு இருந்த நிலையில் உங்களுக்கு கடிதம் எழுதினேன். நீங்களும் ஜெபித்து கடிதம் எழுதியிருந்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அழகான ஆண்குழந்தையைக் கொடுத்தார்.

2. **சகோதரி வசந்தா சோமன்,** K.S.A

என் மகள் +2 தேர்ச்சி பெறவும், மகள் 10ம் வகுப்பில் தேர்ச்சி பெறவும் கர்த்தர் கிருபை செய்தார்.

3. **சகோதரி ஜேனட்,**

23.09.09 அன்று கர்த்தர் எனக்கு சுகபிரசவத்தில் ஆண்குழந்தை தந்தார். தேவனுக்கே மகிமை.

4. **சகோதரி மரியா,** TVGM Staff.

நான் +2 வரை தமிழ் மீடியத்தில் படித்தேன். வேதாகம கல்லூரியில் இன்டர்வியூ செல்லும் போது ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியால் கஷ்டப்பட்டேன். நீங்கள் எனக்காக ஜெபித்தீர்கள். முதலாவது தேர்வில் வகுப்பில் 2வது மதிப்பெண் எடுத்து, அடுத்த செமஸ்டரில் கிரேக் மொழியில் முதல் மதிப்பெண் எடுக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## புறமதநண்பர்கள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள்:-

1. **சகோதரி சியாமளாதேவி, நாகை.**

எனக்கு காலேஜில் 2nd Shift Regular-ல் கிடைக்கும்படி ஜெபிக்க கடிதம் எழுதினேன். உங்களிடமிருந்து பதில் கடிதம் கிடைத்த மறுநாளே Regular-ல் கிடைத்து விட்டது.

2. **சகோதரி நந்தினி, கோவை.**

எனது செமஸ்டர் தேர்விற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஒவ்வொரு செமஸ்டரிலும் வெற்றியைத் தந்தார்.

3. **சகோதரி பிரேமா, விருதுநகர்.**

என் மகனின் குழந்தைபாக்கியத்திற்காக ஜெபிக்க எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டார்.

4. **சகோதரி மாலதி, ஈரோடு.**

நான் கணிதத் தேர்வில் வெற்றி பெறவும், தங்கை நன்றாக படிக்கவும், மாமாவின் கால் முட்டு குணமாகவும் கடிதம் எழுதினேன். **"கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்"** என்று பதில் எழுதியிருந்தீர்கள். கர்த்தர் அனைத்திலும் வெற்றியைத் தந்தார்.

5. **சகோ. அழகர்சாமி, சிவகங்கை.**

என் மனைவிக்கு சுகபிரசவத்தில் கர்த்தர் பெண்குழந்தையை தந்தார்.

## ஜெபவிண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்!

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் 12 மணி வரை கடிதம் மற்றும் தொலைபேசி, ஈமெயில் மூலமாக ஜெபவிண்ணப்பங்களை அனுப்புபவர்களுக்காக உபவாசித்து ஜெபித்து வருகிறோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அநேக அற்புதங்களை செய்து வருகிறார். நீங்களும் உங்கள் ஜெபவிண்ணப்பங்கள் எதுவாயினும் தயங்காமல் இன்றே எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தர் அற்புதங்களைச் செய்வார். **தேவனுக்கே மகிமை!**

# கலிலேயா முகாம் 2009



Rev.J.P.D. சுவாமிதாஸ் ஜெபித்தல்



Pr. மாற்கு லூயிஸ் செய்தியளித்தல்



கூட்டத்தின் ஒரு பகுதி



மனிஷா, கிறிஸ்டினா பாடுதல்



ஜெனோகர் பாடுதல்



ஜிலிக்ஸி பாடுதல்



குண்டல் சிறுவர் இல்லப் பிள்ளைகள்



ஜிலிக்ஸி தின்பண்டம் வழங்குதல்

# கலிலேயா முகாம் 2009



திரு. இரத்தினம் ஆசியர் உரை



திரு.மனோகர் ஆசிரியர் உரை



சகோ.பிரேம்குமார் பாடல் குழுவினர்



சகோ. ஆரோக்கியம் பாடல், சாட்சி




சகோ. பன்னீர் 100–கிராம சாட்சி



சகோதரி ஷோபனா அறிமுகப் பணி



சகோ.பொன்னரசு குடும்பத்திற்காக
பாஸ்டர் மாற்கு லூயிஸ் ஜெபித்தல்



ஒவ்வொருவருக்காகவும் பாஸ்டர் மாற்கு
கருத்தாய் ஜெபித்தார்கள்.

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2009 அக்டோபர் மாத ஊழிய அறிக்கை

இயல்பான தினசரி ஊழியங்கள் பாதிக்கப்படும் அளவிற்கு கிரியை செய்த பிசாசின் தந்திரங்களை கர்த்தரே முறியடித்து தீமையை நன்மையாக மாற்றித் ஊழியங்கள் ஒழுங்காக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார்.

சுவிசேஷ ஊழியம் செய்து வந்த சில தாய்மார்களின் குடும்ப சூழ்நிலைகள் காரணமாக 3 மாதங்களாக சுவிசேஷ ஊழியம் தடைப்பட்டு காணப்படுகிறது. தேவன்தாமே அவர்களது குடும்ப சூழ்நிலைகளை அநுகூலமாக மாற்றவும், அவர்களுக்கு நல்ல சுகபெலனை தரவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

அறிமுகப்பணி செய்ய புதிய சபைகளில் கர்த்தர் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும், சங்கரன்புதூர், கண்ணன்பதி, தேவகுளம், குறண்டி, மாங்குளம் ஆகிய கிராமங்களில் பின்தொடர்பணி செய்யக் கிடைத்துள்ள விலாசங்களை நேரடியாகப் போய் சந்தித்து, அவர்களை கர்த்தருக்குள் வழிநடத்த தடைகள் மாறும்படியாக ஜெபித்துக் கொள்ளுங்கள். **ஜெபமே ஜெயம்! தேவனுக்கே மகிமை!**


கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்**

**5 / 3A** கிரவுண தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001 செல்: **98658 26424** போன் : **04652 - 277251**


## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

**கர்த்தராலே . . . சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்.** லூாக். 1:45

### நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை

| | |
|---|---|
| **நாள் :** **30.11.2009** திங்கள் | **நாள் :** **01.12.2009** செவ்வாய் |
| **நேரம் :** 7PM முதல் 12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

### நடைபெறும் இடம்

**TVGM தலைமை அலுவலகம், 100 – கிராமம், திருச்சி.**





**01.10.2009 வாக்குத்தத்த செய்தி கூட்டத்தில் பாஸ்டர் மாற்கு வூாயிஸ்**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** கர்த்தருடைய கிருபையினால் 2000 ஏப்ரல் முதல் 2009 மார்ச் 31 முடிய கடந்த 9 வருடங்கள் TVGM ல் கடன் இல்லாதபடி ஊழியத்தை நிறைவேற்ற கர்த்தர் உதவி செய்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

ஆனால் 2009 ஏப்ரல் முதல் நவம்பர் முடிய கடந்த 8 மாதங்களில் நிர்வாக அலுவலக கட்டிடம், **சிறுவர் இல்ல கட்டிடம்,** இலங்கை ஊழியம் ஆகியவற்றால் TVGM ஊழியங் களில் எதிர்பாராமல் உத்தேசமாக ரூ.10 லட்சம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதுவரை அற்புதமாக நடத்தின தேவன் 2010 மார்ச் 31 வருடாந்திர கணக்குகள் முடிப்பதற்குள் சகல குறைவுகளையும் நிறைவாக்க ஜெபியுங்கள்.

**செவ்வாய்** TVGM டிரஸ்டுக்கு FCRA Registration கர்த்தர் கிருபையாக கொடுக்க கருத்தாய் ஜெபியுங்கள்.

**புதன்:** TVGM – ன் நீண்டகால தரிச னமான **கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்** அமைக்க 15 ஏக்கர் நிலம் கர்த்தர் கொடுக்கும்படி ஜெபித்து வந்தோம்.

கர்த்தர் கிருபையாக திருச்சியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் குக்கிராமத்தில் 7 ஏக்கர் நிலத்தை ரியல் எஸ்டேட் புரோக்கர் மூலமாக காட்டியுள்ளார். கடந்த 10 மாதங்களாக வாங்க முடியாமல் கடத்திக் கொண்டே வந்தோம். ஆனாலும் இப்பொழுது அட்வான்ஸ் ரூ. 1,50,000 லட்சம் உடனே கொடுக்கும்படியாகவும், மீதி ரூ.13,50,000 லட்சத்தை மூன்று மாதத்திற்குள் ( 2010 ஜனவரி 31க்குள் ) செலுத்தும்படி கேட்கிறார்கள். தேவசித்தம் வெளிப்பட ஜெபியுங்கள்.

**வியாழன்:** TVGM **100**–கிராம ஊழியத்திற்காக **யோவான் சுவிசேஷப் புத்தகம்** சென்னை I.B.L ஸ்தாபனத்தில் வாங்கின வகையில் நாம் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.2 லட்சம் கர்த்தர் அற்புதமாக சந்திக்க ஜெபியுங்கள். மேலும் 2010ம் ஆண்டிற்கு 2 லட்சம் யோவான் சுவிசேஷப் புத்தகம் வாங்க 2010 ஜனவரியில் விண்ணப்பிக்க ஜெபியுங்கள்.

**வெள்ளி:** 2009 டிசம்பர் கிறிஸ்மஸ் மாதத்தில் அன்பளிப்பு, ஏழைகள் உதவிக்காக உத்தேசமாக ரூ.1,48,500 தேவைப்படுகிறது. கடந்த ஆண்டில் நிறைவாக நடத்தின தேவன் இந்த ஆண்டிலும் நடத்துவார் என்ற நிச்சயத்தோடு இருக்கிறோம். தேவ கிருபை வெளிப்பட ஜெபியுங்கள்.

**சனி:** TVGM அறிமுகப்பணி அலுவலகத்திற்கு ஒரு ஆம்னி வேன் மிக அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. மேலும் சொந்த கட்டிடம் கர்த்தர் கிருபையாக கொடுக்க ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** TVGM ஊழியங்களுக்காக ஜெபிக்கிற ஒவ்வொரு குடும்பத்தா ருக்கும் நாம் ஜெபிக்க வேண்டியது நமது கடமையாக உள்ளது. 2009ல் அவர்களுக்கு தேவன் செய்த நன்மைகளுக்காக துதியுங்கள். குறைவு களை நிறைவாக்கும்படி ஜெபியுங்கள். 2010ல் அதிசயங்களை காணப் பண்ணும் படியாக ஜெபியுங்கள்.

மேலும் SLVGM, OVGM மற்றும் தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

**TVGM தலைமை அலுவலக முகவரி**

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


MR.STEPHEN CHRISTOPHER,
MANAGING DIRECTOR.
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
"100 - VILLAGE"
SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், **'100 கிராம ஊழியம்'** அறிக்கை, மாதாந்திர வாக்குத்தத்த செய்தி மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( 80G வரிவிலக்கு உண்டு)
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

( அல்லது )

MR. STEPHEN CHRISTOPHER,
SB 12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.
**Editor : Mr. Stephen Christopher**

**Return Request**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER : TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லம் – சிறப்பு விருந்தளித்தல்





திருச்சி சிறுவர் இல்லம்



குண்டல் சிறுவர் இல்லம்



2009 அக்டோபர் மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளித்த சகோ.பழனிசாமி (மகன் பிறந்தநாள்), திருமதி.பூரணலட்சுமி (பேத்தி பிறந்தநாள்), சகோ.ஜோசுவா (மகன் பிறந்தநாள்) சகோதரி பாக்கியம் நினைவு நாள், சகோதரி சகோ. இஸ்ரவேல் ( பிறந்தநாள் ) மற்றும் இனிப்புகள் வழங்கிய வினோதினி ( 29வது பிறந்தநாள்), சகோ.உதயக்குமார் (மகன் பிறந்தநாள்) ஆகியோருக்கு சிறுவர் இல்லப் பிள்ளைகள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**100 – கிராம ஊழிய பத்திரிக்கை வாசகர்கள் யாவருக்கும் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் தங்கள் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.**

### TVGM ஏலீம் சிறுவர் இல்ல கட்டிடப் பணி

தேவனுடைய பெரிதான கிருபையால் 2009 அக்டோபர் 21 அன்று சிறுவர் இல்ல பிரதிஷ்டை நடைபெற்று முடிந்தததது. **தேவனுக்கே மகிமை.** இன்னும் மின்சார வசதிகள், பிள்ளைகளின் தேவைக்கேற்ற அளவு ரூம் வசதிகள் மற்றும் கழிவறை, குளியலறை, சமையல் அறை யாவும் படிப்படியாக கட்டப்பட கர்த்தர் கிருபை புரிய ஜெபியுங்கள்.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री